**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – 2019–2020ஆம் ஆண்டு – உலக இசை தினம் (ஜுன் 21) – இசை நிகழ்ச்சிகள் மற்றும் இசைப் போட்டிகள் நடத்துதல் – படைப்பாற்றல் மிக்க இசை நகரமாக சென்னை மாநகரை யுனெஸ்கோ அறிவித்ததை முன்னிட்டு சென்னையில் இசைவிழா நடத்துதல் - நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (நிலை) எண். 102

நாள்: 15–07–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், ஆனி 30

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண் 172, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, நாள் 14.09.2018
2. கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கடித ந.க. எண் 3848/இ1/2018, நாள் 09.05.2019

*****

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25.06.2018 அன்று நடைபெற்ற கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது, "உலக இசை தினம்" (World Music Day) ஜுன் 21 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, தமிழகத்தில் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாடும் விதமாக, அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் வாயிலாக, ஆண்டுதோறும் இசை நிகழ்ச்சிகள் மற்றும் இசைப் போட்டிகள் ரூ.11.50 இலட்சம் செலவில் நடத்தப்படும் எனவும், யுனெஸ்கோ, படைப்பாற்றல் மிக்க இசை நகரமாக சென்னை மாநகரை அறிவித்ததை முன்னிட்டு, கலை பண்பாட்டுத் துறை சார்பாக, ஆண்டுதோறும் ரூ.10.00 இலட்சம் செலவில் சென்னையில் இசை விழா நடத்தப்படும் எனவும், இதற்கென, தொடரும் செலவினமாக ஒட்டுமொத்தமாக ரூ.21.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒவ்வொரு வருடமும் சர்வதேச அளவில் ஜுன் 21 அன்று கொண்டாடப்படும் "உலகத இசை தினத்தினை" முன்னிட்டு தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் மூலம் இத்தினத்தினை சிறப்பாகக்

கொண்டாட அரசு இசைக்கல்லூரி ஒன்றுக்கு ரூ.75,000/– வீதம் 4 அரசு இசைக்கல்லூரிகளுக்கு ரூ.3.00 இலட்சமும், மாவட்ட அரசு இசைப்பள்ளி ஒன்றுக்கு ரூ.50,000/– வீதம் 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கு ரூ.8.50 இலட்சமும், யுனெஸ்கோ, படைப்பாற்றல் மிக்க இசை நகரமாக சென்னை மாநகரை அறிவித்ததை முன்னிட்டு கலை பண்பாட்டுத் துறை மூலம் சென்னையில் இசைவிழா நடத்திட ரூ.10.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.21.50 இலட்சத்தினை 2018–2019ஆம் நிதியாண்டில் தொடரும் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2018–2019ஆம் நிதியாண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அரசாணை வெளியிடப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு இதற்கான தொகை விடுவிக்கப்படாததால், ஒவ்வொரு வருடமும் சர்வதேச அளவில் ஜூன் 21 அன்று கொண்டாடப்படும் உலக இசை தினத்தினை முன்னிட்டு தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் மூலம் 2019–2020ஆம் நிதியாண்டில் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாட, அரசு இசைக்கல்லூரி ஒன்றுக்கு ரூ.75,000/– வீதம் 4 அரசு இசைக்கல்லூரிகளுக்கு ரூ.3.00 இலட்சமும், மாவட்ட அரசு இசைப்பள்ளி ஒன்றுக்கு ரூ.50,000/– வீதம் 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கு ரூ.8.50 இலட்சமும், யுனெஸ்கோ படைப்பாற்றல் மிக்க இசை நகரமாக சென்னை மாநகரை அறிவித்ததை முன்னிட்டு கலை பண்பாட்டுத் துறை மூலம் சென்னையில் இசை விழா நடத்திட ரூ.10.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.21.50 இலட்சம் தொகைக்கு ஒப்பளிப்பாணை வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஏற்று, ஒவ்வொரு வருடமும் சர்வதேச அளவில் ஜூன் 21 அன்று கொண்டாடப்படும் உலக இசை தினத்தினை முன்னிட்டு 2019–2020ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் மூலம் உலக இசை தினத்தினை சிறப்பாகக் கொண்டாட அரசு இசைக்கல்லூரி ஒன்றுக்கு ரூ.75,000/– வீதம் 4 அரசு இசைக்கல்லூரிகளுக்கு ரூ.3.00 இலட்சமும், மாவட்ட அரசு இசைப்பள்ளி ஒன்றுக்கு ரூ.50,000/– வீதம் 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கு ரூ.8.50 இலட்சமும், யுனெஸ்கோ படைப்பாற்றல் மிக்க இசை நகரமாக சென்னை மாநகரை அறிவித்ததை முன்னிட்டு கலை பண்பாட்டுத் துறை மூலம் சென்னையில் இசை விழா நடத்திட ரூ.10.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.21,50,000/– (ரூபாய் இருபத்தோரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 2019–2020ஆம் நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:-

i. உலக இசை தினத்தை முன்னிட்டு, இசைப்பள்ளிகள் மற்றும் இசைக்கல்லூரிகள் ஆகியவற்றின் வாயிலாக கொண்டாடப்படவுள்ள நிகழ்வுகளிலும், உயரிய இசைத் தொன்மைக்காக படைப்பாக்க நகரங்களில் இடம்பெற்றுள்ள சென்னையின் பெருமையை போற்றும் வகையில் கலை பண்பாட்டுத் துறையின் மூலம் நடத்தப்படவுள்ள இசை விழாக்களிலும் இசை நிகழ்ச்சிகள், இசைப் போட்டிகள், இசை வினாடி வினா, இசைப் பட்டிமன்றம், இசைக் கருத்தரங்கம், இசை செயல்முறை பயிலரங்கம் மற்றும் இசை சிகிச்சை ஆகியவற்றை நடத்திட வேண்டும்.

ii. உலக இசை தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் மற்றும் கலை பண்பாட்டுத் துறை வாயிலாக நடத்தப்படும் நிகழ்வுகள் அனைத்தும் செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் இடம்பெறத்தக்க வகையில் அமைய வேண்டும்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும் :-

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – AS உலக இசை தினத்தை கொண்டாடுதல் – 08 விளம்பரமும் பிரச்சாரமும் – 09 ஏனையவை
(IFHRMS D.P.C. 220500 102 AS 30809)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி. இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை, நிதி (வ.செ.பொ–I)த் துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963–ன் இணைப்பில் உள்ள படிவம் "அ"–வின்படி இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொ–I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவித்தை 2019–2020ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வ.செ.பொ–I / சு,ப(ம)அ.நி)த் துறைக்கு அனுப்புமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுப் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இத்திட்டத்தினை நிறைவேற்றி, அதன் பின்னர், இதற்காக ஏற்பட்ட உள்ளபடியான செலவின விவரங்கள் மற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்டது குறித்த அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய பயனீட்டுச் சான்றிதழ், புகைப்படங்கள், செய்தி நறுக்குகள் ஆகியவற்றை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகளிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 28683/நிதி(கல்வி–II)துறை/2019, நாள் 10.07.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 664 (அறுநூற்று அறுபத்து நான்கு)

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
முதல்வர், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள்,
சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருவையாறு
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)

தலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்,
திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் (கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA) / (E&RSA) / (A&E), சென்னை-18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை-9.

<u>நகல்:-</u>

சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், நிதித்துறை, சென்னை-9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
நிதி (கல்வி-II/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II)த் துறை, சென்னை- 9
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்-1/பொது) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

15/7/19
பிரிவு அலுவலர்

15.7.19